


ஃபெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு

# தலைமைக் கழகம் அறிவுறுத்தலின்படி நிவாரணப் பொருட்கள்!

## அண்ணா அறிவாலயத்தில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுப்பி வைத்தார்!

சென்னை, டிச. 6 -

ஃபெஞ்சல் புயலின் காரண மாக வரலாறு காணாத மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்க ளில் அரசின் நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு இயல்பு நிலை திரும்பி வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தி.மு.க. சார்பில் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்க அறிவுறுத்தியி ருந்த நிலையில் அரியலூர் மாவட் டத்தின் சார்பில் அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர் 25,000 உண வுப் பொட்டலங்களை விக்கிர வாண்டி தொகுதியில் விநியோகித் துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத் தின் சார்பில் அமைச்சர் தா. மோ.அன்பரசன் 1 லட்சம் கிலோ அரிசியை அனுப்பி வைத்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டத் தின் சார்பில் அமைச்சர் மா.சுப்பிர மணியன் அவர்கள் ஏற்பாடு செய் துள்ள 1.5 லட்சம் கிலோ அரிசி ஏற்றிய வாகனங்களை முதல மைச்சர் அவர்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் இருந்து பாதிக்கப்பட்ட மாவட்டங்க ளுக்கு அனுப்பி வைத்தார்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஈ.தங்கராஜ், தெற்கு மாநகர அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ் ஏற்பாட்டில் மாவட்ட தலைமை மருத்துவமனையில் பிறந்த 27 குழந்தைகளுக்கு தலா 1 கிராம் தங்க நாணயம் மற்றும் 3 ஆயிரம் மதிப்புள்ள பரிசு பெட்டகத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் பகுதி செயலாளர்கள் கொ.ராமதாஸ், மியாமி ஆ. அய்யப்பன், கோவிந்தராஜ் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.



"ஃபெஞ்சல் புயல் காரணமாக பெய்த கனமழையால், விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, காணை ஒன்றியம், அனந்தபுரம் நந்தன்கால்வாயினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு கிராம மக்களை பாதுகாப்பான இடத்தில் தங்க வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.




